பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 31 ஞாயிற்றுக்கிழமை (15 08 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 250

வடபகுதி மீதான பொருளாதாரத்தடை; நீக்க முடியாது என அறிவிப்பு

மன்னாரில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 15
மன்னார் மாவட்டம் பண்டிவிரிச்சானில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இரண்டு 'புக்காரா' விமானங்கள் குண்டு வீச்சினை நடத்தின.

காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட இத் தாக்குதலால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை (உ-5)

அரசின் இறுதி முடிவை ராணுவம் வெளியிட்டது

கொழும்பு, ஆகஸ்ட் 15
வடக்கின் மீதான பொருளாதாரத் தடையை நீக்க முடியாது என்ற ஸ்ரீலங்கா அரசின் இறுதி முடிவை இராணுவத் தளபதிகள் நேற்று வெளியிட்டதாக பி. பி. ஸி அறிவித்தது.

தமது பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிக்க அரசு பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் என விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர். அந்தக் கோரிக்கையை நிராகரிப்பது என்ற அரசின் இறுதித் தீர்மானத்தை இராணுவத் தளபதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

விசேட அதிரடிப்படையினர் மட்டக்களப்பில் குவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 15
மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருப்பதாக "புலிகளின் குரல்", தெரிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் தற்சமயம் விசேட அதிரடிப் படையினரின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

அம்பாறை மாவட்டத்தில் உள்ள விசேட அதிரடிப்படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு அவர்கள் தங்கியிருந்த சிறிய முகாம்கள் மூடப்பட்டு வருவதாகவும் அங்கு பொலீஸார் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

பெலவத்தை முகாம் கைதிகள்

தண்ணீர்த் தாங்கி உச்சியில் சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு, ஆக. 15
பெலவத்தை சிறைச்சாலையில் உள்ள 67 தடுப்புக்காவல் கைதிகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் சாகும் வரையான உண்ணாவிரதப் போட்டத்தை ஆரம்பித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டுள்ளன.

கைதிகளில் ஐவர், நூறு அடி உயரமுடைய தண்ணீர்த் தாங்கியில் ஏறி, அங்கிருந்தவாறே உண்ணாவிரதம் இருப்பதாகவும் —

ஏனையோர் தடுப்பு முகாமுக்குள் உண்ணாவிரதம் இருப்பதாகவும் மீகாஹதென்ன பொலீஸார் தெரிவித்தனர்.

தங்களுக்கு எதிரான தடுப்புக் காவல் கட்டளைகளை விலக்கி, நிபந்தனையின்றி தங்களை விடுவிக்க கோரியே கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். (உ-6)

மாகாணசபைக்குச் செல்ல

சந்திரசேகரனுக்கு நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஆக 15
தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன் மத்திய மாகாண சபை அங்கத்தவராகச் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு வழியாக —

அவரை நாளை மறுதினம் நடைபெறும் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைத்துச் செல்லும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி வீரசூரிய சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நேற்று முன்தினம் இந்த உத்தரவை விடுத்தார்.

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் வரதன் என்பவருக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்

[5 ஆம் பக்கம் பார்க்க]

இன்று இந்திய சுதந்திர தினம்:

விமானம் மூலம் புலிகள் ராவைத் தாக்கலாமாம்!

மணிலா, ஆக. 15
இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று புதுடில்லி செங்கோட்டையில் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கொடியேற்றும் வைபவத்துக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவின் மரணத்துக்கு இந்தியா காரணம் என்பதால் விடுதலைப் புலிகள் போராளிகளோ அல்லது சீக்கிப் போராளிகளோ "மைக்றோ லைற்" விமானம் மூலம் பிரதமர் நரசிம்மராவ் மீது திடீர் தாக்குதல் நடத்தலாம் என அஞ்சப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கை கடுமையானதாக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறியிருப்பதாக [illegible] வானொலி தெரிவித்தது. (உ-5)

இன்றும் கிளாலி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஆக. 15
கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் யாழ்மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ-5)

மோதல்

யாழ்ப்பாணம், ஆக. 15
கிளாலிக் கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

எனினும் பயணிகள் படகுச் சேவை தடங்கல் எதுவுமின்றி நடைபெற்றது.

மோதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (உ-15-17)

புலமைப்பரிசில் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், ஆக. 15
இன்று நடைபெற உள்ள 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் 94 பரீட்சை நிலையங்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுகிறார்கள். காலை 9-30 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும். (உ-16)

அம்பாறையில் விமானப்படை சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஆக 15
அம்பாறையில் அண்மையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் விமானப் படை சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

அம்பாறை பக்கியெல்ல விமானத் தளத்துக்குப் பின்புறமாக குளிக்கச் சென்ற வேளை — விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் — தர்மபால என்ற அந்த விமானப் படைச் சிப்பாய் உயிரிழந்ததாக பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (உ-5)

தமிழகத்தில் ஈழமக்களின்

அகதி முகாம்களை பார்க்க ஐ. நா தூதரகம் முயற்சி

லண்டன், ஆக 15
தமிழ் நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதி முகாம்களைப் பார்வையிட தமக்கு அனுமதி வழங்குமாறு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் நாட்டில் ஈழத் தமிழர்கள் தங்கியுள்ள 131 அகதி முகாம்களில் உள்ள சுகாதார மற்றும் வசதிகள் மிக மோசமாக இருப்பதாக அரச சார்பற்ற பொது நிறுவனங்கள் அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்திடம் பல தடவைகள் முறையிட்டிருந்தன.

அந்த முறைப்பாடுகள் குறித்து நேரில் பார்த்து அறிந்து கொள்வதற்காகவே தமக்கு அனுமதி வழங்குமாறு அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் இந்திய அரசைக் கேட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இருந்து தங்கள் விருப்பத்துக்கு மாறாக அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்களா என்பதை கண்கா

(6 ஆம் பக்கம் பார்க்க)

பயணிகள் சேவையில் 'குமாரி'

யாழ்ப்பாணம், ஆக. 15
பருத்தித்துறைக்கும் திருமலைக்கும் இடையே 'குமாரி' கப்பல் மூலமும் பயணிகள் சேவையை மேற்கொள்ள கொழும்பில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

பருத்தித்துறைக்கு உணவுப் பொருள்களுடன் வரும் 'குமாரி' கப்பல் திரும்பிச் செல்லும் போது — கப்பல் மூலம் கொழும்பு செல்லத் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளவர்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினரை — திருமலைக்கு ஏற்றிச் செல்லும்.

திருமலை துறைமுகத்தில் தரிப்பதற்கான கட்டணச் செலவு உட்பட இதர செலவுகளுக்காக 'குமாரி கப்பலுக்குச் சொந்தமான வர்த்தக

[6 ஆம் பக்கம் பார்க்க !

திருமலையில் தேடுதல்

திருமலை நகரம் மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் படையினர் கூட்டாகத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினருடன், பொலீஸாரும், கடற்படையினரும் இணைந்து சுற்றி வளைப்புத் தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் —

திருமலை நகரில் கடந்த வெள்ளிக்கிழமை தந்தை, மகன் ஆகிய இருவர் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

வெள்ளை வானில் சிவில் உடையில் வந்தவர்கள் வீட்டிலிருந்த அவர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்றனர்.

மோட்டார் வாகன சாரதியான திரு. தருமபாலன் மற்றும் அவரது மகனான தயாபரன் ஆகியோரே கைதானவர்கள் ஆவர். (உ-க-5)

தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்?

யாழ்ப்பாணம், ஆக. 15
திருகோணமலையில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-15)

ஐ.தே.க.-ஐ.ஐ.தே.மு. இணைவு செவ்வாயன்று அறிவிப்புவரும்

இருவருக்கு எம். பி. பதவி

கொழும்பு, ஆக. 15
ஐ. தே. கவுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைவது தொடர்பாக நடந்த பேச்சு வார்த்தைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் எதிர்வரும் 17ஆம் திகதி இது தொடர்பான அறிவித்தல் வெளியாகலாம் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய ஐ. ஐ தே. மு. தலைவர் திரு. காமினி திஸநாயக்கா உட்பட இருவருக்கு மட்டுமே நாடாளுமன்றத்தில் இடம் ஒதுக்கப்படும் என்றும் — அவர்களுக்கு வழிவிட ஐ தே. கவின் இரு எம். பிக்கள் பட்டியலில் இருந்து இருவர் விலகுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ. ஐ தே. மு. இன் 10 முன்னாள் அமைச்சர்களில் சிலர் மாகாணசபை உறுப்பினர்களாகத் தெரிவாகி இருப்பதால் அவர்களுக்கு அந்த அந்த மாகாண சபைகளில் அமைச்சர் பதவி வழங்கப்படும். ஏனையோருக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

நிதி அமைச்சு தொடர்ந்து டி. பியிடமே!

கொழும்பு, ஆக. 15
கடந்த வியாழனன்று தனது முதலாவது அமைச்சரவை மாற்றத்தை அறிவித்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க —

நிதி அமைச்சு மற்றும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சு ஆகியவற்றைத் தொடர்ந்து தம்வசம் வைத்திருப்பது [illegible] செய்தி ஏஜென்ஸி ஒன்று சுட்டிக்காட்டியது. (உ-6)

2 ராஜாங்க மந்திரிகளுக்கு அமைச்சரவை அந்தஸ்து

கடந்த வியாழனன்று இடம் பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் பின்னர், மற்றும் இரு ராஜாங்க அமைச்சர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்பட இருப்பதாக ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க, விஞ்ஞான தொழில் நுட்ப அலுவல்கள் அமைச்சர் போல் பெரேரா ஆகியோரே — எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்னர் — அமைச்சர்களாகப் அந்தஸ்துள்ள அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவிருக்கின்றனர். (உ-6)

சில்லையூரின் பாதுகாவலி

கதிரை மாதா திருவிழா சிறப்பம்சம்

மாதகல் இராணுவக் கிராமமானது
சில்லாலைக்கு 'எறி' விழல் கிரமமானது
முக்கனிச் சோலையில் முப்படை மோதுது
பெத்த பூமியோ யுத்த பூமியானது
ஆண்டு ஒன்று முன் நாம் ஊர்பெயர்ந்தோம்
அன்னை காவலில் அருளடைந்தோம்
உடுக்க உடை எடுத்தோம்
படுக்கப் பாய் எடுத்தோம்
வீடு பார்க்கப் போவோம் - நாம்
விறகெடுக்கப் போவோம்
அன்னை ஆலயம் எழுந்து நிற்குது
அன்னை கதிரையில் அமர்ந்திருக்கிறாள்
அன்னை வடக்கைப் பார்த்திருக்கிறாள்
'தம்பியள்' எல்லையில் காத்திருக்கினம்
ஏகாந்த பூமிக்கு போய் வருகின்றோம்
கதிரையில் இருந்து இரங்கும் தாயே!
சில்லையம்பதியின் சீர்மிகு அரசியே
உன் பாதம் சூழ நாங்கள் வாழ
நாளை விரைவில் தாரும் தாயே.



''அம்மா தாயே தயாபரி
அடியோர் எம்மை ஆதரி
வெற்றிலை செடி கொடி பாக்குவும் - அதை
வெற்றி தரும்படி ஆக்கவும்''

''என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப்
போற்றுகின்றது
என் மீட்பராம் கடவுளை நினைத்து என்
இதயம் களி கூருகின்றது
ஏனெனில் தாழ்நிலை நின்ற தம் அடிமையை
கடைக் கண் நோக்கினார்.

மரியாளின் பாடல் லூக் 1 : 46 — 48a

(உ-2024)

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை

அமரர் க. சிவபாதசுந்தரம்

[B. Sc. (Hons) Dip. in-ED, S. L, E. A. S.]

''அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்ற கூற்றுக்கமைய அறிவு சான்ற பேராசானாக, திறமை மிக்க நிர்வாகியாக, பல்துறை விற்பன்னராக மிளிர்ந்தவர்; விளையாட்டுத் துறையில் நுழைபுலம் மிக்கவர்; சமூக சேவை சர்வேஸ்வரன் பணி எனக் கொண்டு நின்றவர்; கூட்டுறவு சேவையிலும் தன்னை அர்ப்பணித்தவர்; எல்லாவற்றிலும் மேலாக செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்பாளர்.

எமக்கு பலவழிகளிலும் வழிகாட்டியாக நின்றது மட்டுமன்றி பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அன்பிற்கினிய எம் தலைவா! அமரரே எங்கள் நெஞ்சிருக்கும் வரை தங்கள் நினைவு சிறந்திருக்கும்; எங்கள் சிவம் மாஸ்டரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

Our Self made men are the glory of our Institutions

அறிவொளி சனசமூக நிலையம்,
கிளிற்றேர்ஸ் விளையாட்டுக் கழகம்.

விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,
கரவெட்டி.

(26948)

சேவைநலம் பாராட்டு விழா

நவாலியூர் அட்டகிரி கந்தசுவாமி கோயில்,
சிவன் கோயில் ஆகியவற்றின்
பிரதானகுரு

சிவஸ்ரீ சோ. ஷண்முகரத்தினக் குருக்கள்
அவர்களின்

பஞ்ச சப்ததி அப்த பூர்த்தி சாந்தி
வைபவமும்

சேவைநலம் பாராட்டு விழாவும்

ஆடி மாதம் 32 ஆம் திகதி [16-08-1993] திங்கட் கிழமை காலை 8-30 மணிக்கு சாந்தி வைபவமும் பிற்பகல் 2-30 மணிக்கு சேவைநலம் பாராட்டு விழாவும் நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

— விழா அமைப்பாளர்கள்.

நவாலி (26947)

விளையாட்டு நிகழ்வுகள்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 23 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி — 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். இறுதியாட்டத்தில் புங்குடுதீவு அம்பாள் வி. க. அணியை எதிர்த்து கொழும்புத்துறை இளைஞர் வி. க. அணி மோதும்.

(உ-17)

○ ○ ○

சுன்னாகம் சாந்தி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சிங்க மாப்பாணர் விளையாட்டரங்கில் நடத்திவரும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி எதிர் புத்தூர் வளர்மதி வி. க. அணி.

★ 4.30 மணி:- கோப்பாய் கோல்ட் ஸ்ரார் வி. க. அணி எதிர் யாழ். சென். றோக்ஸ் வி. க. அணி.

(உ-20)

இம்முறை 'நரோமா' வராது

யாழ்ப்பாணம், ஆக. 15

திருமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபடும் 'நரோமா' கப்பல் நாளை மறுதினம் செவ்வாய் பயணிகளை ஏற்றி வரும் சேவையில் ஈடுபடமாட்டாது என நேற்று மாலை கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் தெரிவித்தது.

வழமையாக திருமலையில் இருந்து புறப்பட்டு செவ்வாய் கிழமைகளில் காங்கேசன் துறைக்கு வரும் அந்தக் கப்பல் [illegible] துறைக்கு வருவது தெரிந்ததே.

எமது புதிய வெளியீடுகள்

1. ராம்கி — ரகுமான் — கௌதமி
"ஆத்மா"

2. அர்ஜுன் — கௌதமி — கவுண்டமணி
"ஜென்டில்மேன்"

"புதியமுகம்" ஒறிஜினல் பிரதியில்

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி (மேல்மாடி),
யாழ்ப்பாணம். (26949)

அருணகிரிநாதர் இன்னிசைக் குழு

கருணைக்கடலாம் கந்தப்பெருமானின்
திருப்புகழைப் பரப்புவதற்காக
ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு

நா. பூபாலராஜா,
T. E. லேன்,
மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

(6621)

வலி. வடக்குப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கம்
ஆரம்பிக்க இருக்கும்

தையல் பயிற்சி நெறி

I 18—30 வயதிற்கு இடைப்பட்ட ஆண், பெண்
II க. பொ. த. (சாதாரண) படித்தவர்கள்
III தொண்டர் சேவையில் ஈடுபாடுடையவர்கள்

மேற்படி பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 21 - 08 - 93 சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்க பணிமனையில் நடைபெற இருப்பதனால் பயிற்சி நெறியை பயில விரும்புவோர்கள் தவறாது சமூகம் தருமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வலி. வடக்குப் பிரிவு.

(6622)

யாழ்ப்பாணம்

யுத்தக் கைதிகள் விவகாரம் மீண்டும் ஒருவட்டம் போட்டுவந்து நிற்கிறது

பூநகரிப் பாதையை திறப்பது சம்பந்தமாக கொழும்பில் மற்றொரு சுற்றுப் பேச்சு?

அரசியல்

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிக்கும் விவகாரத்தில் அரசாங்கம் ஒரு சுற்றுச் சுற்றிவந்து, ஒரு வட்டம் போட்டு, தொடங்கிய இடத்தில் மீண்டும் வந்து நிற்கிறது!

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த 39 யுத்தக் கைதிகளும் கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி சாகும் வரை உண்ணாவிரதமிருக்கத் தொடங்கியதை தொடர்ந்து இவ்விவகாரம் பிரசித்தமும், முக்கியத்துவமும் பெற்றது.

யுத்தக் கைதிகள் விடயத்தில் இனியும் அக்கறை காட்டாவிடில் சிங்கள மக்களின் அதிருப்தியை மட்டுமன்றி படையில் உள்ளவர்களின் எதிர்ப்பையும் சம்பாதிக்க நேரும் என்ற அச்சத்தினால் அரசு கைதிகளை மீட்க நினைத்தது.

ஆனால் அதனைச் சரியான வழிமுறைப்படி கையாண்டு விடயத்தை ஒப்பேற்ற எண்ணாது, தனது மேலோங்கித் தனத்தைக் காட்டவும் அதற்கான ஏமாற்று வேலையில் ஈடுபடவும் முனைந்தது.

கைதிகள் பரிமாற்றத்துக்கு உரிய சர்வதேச விதிமுறைப்படி இரு தரப்பினரதும் கைதிகளை பரிமாறிக் கொள்வதற்குப் பின்னடித்தது!

யுத்தக் கைதிகளை விடுவதாயின் ஸ்ரீலங்கா அரசிடம் காவலில் உள்ள அதே எண்ணிக்கையான விடுதலைப் புலிகளை — விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரை — விடுதலை செய்ய வேண்டும் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரின் பெயர்ப் பட்டியலை வழங்க அரச அதிகாரிகள் மறுத்தனர். தமது சிறைகளில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்குக் கூட பின்னடித்தனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சாதாரண தமிழ்ப் பொது மக்களின் பெயர் பட்டியலைத் தயாரித்து அவர்களுக்குப் பதிலாக யுத்தக் கைதிகளை பரிமாறிக் கொள்ள முயற்சித்தனர். அதற்கு விடுதலைப் புலிகள் இணங்க மறுத்ததும், தங்களது கைதிகள் பரிமாற்றத் திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டதாக வானொலியிலும், தொலைக் காட்சியிலும், கொழும்புப் பத்திரிகைகள் மூலமும் பிரசாரம் செய்தனர். தாம் முழு மனதுடனும், முறைப்படியும் விவகாரத்தைக் கையாள்வதாகச் சிங்களவர்களை நம்பச் செய்வதே அதன் நோக்கம்.

அப்போது உண்ணாவிரதம் இருந்த யுத்தக் கைதிகளின் உடல்நிலை மோசமடைகிறது எனக் கேள்விப்பட்டதும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவை விசேட தூதுவராக அனுப்பி உண்ணாவிரதத்தை நிறுத்த முயற்சித்தனர். விடுதலைப் புலிகள் நிபந்தனை இல்லாமலே யுத்தக் கைதிகளை விடுவிக்க இணக்கம் தெரிவித்தே வீரசேகராவை பேச்சுக்கு அனுப்பியதாகவும், அவர் யாழ்ப்பாணம் வந்த பின்னர் விடுதலைப் புலிகள் பொருளாதாரத் தடையை தளர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததாகவும் அரசினர் பொய்ப் பிரசாரம் செய்தனர்.

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட சில பொருள்களை வடபகுதிக்கு எடுத்து வரக் கூடியதாக தடையைத் தளர்த்துவதற்கு முதலில் ஒப்புக் கொண்டு, முதலாவது கப்பலை அனுப்பிப் பின்னர் அதனை இடை நிறுத்தி திசை திருப்பி, ஒப்புக் கொண்ட இணக்கத்தைத் தான் மீறிய பின்னரும் — விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனைகளை விதிப்பதாகவும், அதிக பொருள்களைத் தருமாறு கேட்பதாகவும் இரண்டாம் சுற்றுப் பொய்ப் பிரசாரம் செய்தார்கள்.

அரச அதிகாரிகள் தமது பக்கத்தைக் காப்பாற்றுவதற்கு கூறிய பொய்யான தகவல்களை அப்படியே சிரணித்துக் கொண்டு தென்னிலங்கையில் பத்திரிகைகள் அனைத்தும் புலிகள் மீது பழி சுமத்தியே செய்திகளை வெளியிட்டன. நல்ல சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு, புலிகள் அரசை ஏமாற்றிவிட்டதாக ஆசிரியத் தலையங்கங்களில் கூடத் திட்டித் தீர்த்தன.

உண்மையில்,

பொருளாதாரத் தடையை நீக்கிக் கைதிகளை மீட்பதில் அரசாங்கத் தலைவர்களுக்கு ஓரளவு விருப்பம் இருந்தது. ஆனால் இராணுவ உயர் அதிகாரிகள் அதனை விரும்பவில்லை. அவ்வாறு செய்வது தமது பக்கத்துக்கு தோல்வியை உண்டாக்குவதற்கும் அதனை ஏற்றுக் கொள்வதற்கும் சமம் என்று இராணுவ அதிகாரிகள் கருதினார்கள். அதனாலேயே அரசியல் தலைவர்கள் செய்த முடிவை மாற்றுமாறு நெருக்குதலும், அழுத்தமும் கொடுத்து வழமை போலத் தமது மேலாண்மையை நிலைநாட்டினார்கள்.

தாம் யாழ்ப்பாணம் சென்று பேச்சு நடத்திய போது கேட்டதை விட, விதித்த நிபந்தனையை விட, புதிய நிபந்தனைகள் எதனையும் புலிகள் விதிக்கவில்லை என்று பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா கூறிய போதிலும் இராணுவத் தரப்பினர் அதனைப் பொருட்படுத்தவில்லை. கவனத்தில் சேர்க்கவில்லை;

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான மார்க்கங்களாகவே பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை என்பன விதிக்கப்பட்டன. பொருளாதாரத் தடையை நீக்குவது விடுதலைப் புலிகள் மூச்சுவிட்டு பெரும் போருக்குத் தயார் செய்வதற்கு ஏதுவாகும் என்று கூறி, அரசியல் தலைவர்களின் வாய்களை அடக்கினார்கள்; அவர்களைக் கட்டிப் போட்டார்கள்.

முதலாவது காட்சிக்கு திரை இழுப்பு

இப்போது இரண்டாவது தடவையாக நடந்த உண்ணாவிரதத்தை யுத்தக் கைதிகள் நிறுத்திய பின்னர் ஆரம்பப் புள்ளிக்கு வந்திருக்கிறார்கள். யுத்தக் கைதிகளுக்குப் பதிலாக விடுதலைப் புலிகளை விடுவிக்கத் தயார் என்று நாடகம் ஆடத் தொடங்கியிருக்கிறார்கள்! முதலாவது காட்சிக்கு திரை இழுக்க ஆயத்தமாகிறார்கள்!!

இம்முறை 15 நாட்களாக யுத்தக் கைதிகள் உண்ணாவிரதம் இருந்த போது அது குறித்து எதுவும் பேசாது இருந்துவிட்டு, அவர்கள் அதனைக் கைவிட்டதையும், உறவினர்கள் கொழும்பு திரும்பியதையும் பெரிதாகப் பிரசாரம் செய்தது அரசு.

யுத்தக் கைதிகளின் விடயத்தில் ஜனாதிபதி விஜேதுங்காவும் திரு. பிரட்மன் வீரக்கோனும், ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவும் முந்திய ஏற்பாட்டின் பிரகாரம் பொருளாதாரத் தடையை நீக்கி யுத்தக் கைதிகளை மீட்கலாம் என்ற கருத்துடையவர்களாக இருந்ததாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் இராணுவத்தினர் தமது பழைய ''பிடியை'' தளர்த்தவில்லையாம். பொருளாதாரத் தடையை நீக்கினால் தமது யுத்த மூலோபாயம் கெட்டுவிடும் என்பது மட்டுமன்றித் தடைமூலம் தமக்குக் கிடைக்கும் வருமானம் பட்டுப் போய்விடும் என்ற கவலையும் ஒரு காரண

(5 ஆம் பக்கம் பார்க்க)

— உதயகாந்தன் —

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பிதழ்

தமிழீழத் தேச நிர்மாணம் ஒளிமயமானது என்பதை பறைசாற்றும் நல்லூர்ப் பொருட்காட்சி

தேசவளர்ச்சி

மனம் இருந்தால் இடம் உண்டு.

தேவையேற்படின் அற்புதங்கள் சாதிக்கப்படும்.

எம்மிடம் வளம் உண்டு; மூல வளமும் உண்டு; மூளை வளமும் உண்டு.

நல்லூர் உற்சவ காலத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடத்தும் பொருட்காட்சியைப் பார்ப்போர் மத்தியில் இவ்வாறான உணர்வுகள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

புதுமைகளைப் புரியும் மனிதரின் அபார திறமையை இக்கண்காட்சி மூலம் காணக் கூடியதாக இருக்கிறது. சவால்களுக்கு முகம் கொடுத்து, இனி வேறு வழி இல்லை என்ற நிலைமையில் மாற்று வழிகளைக் கண்டு பிடிப்பதில் தமிழீழ மக்கள் பெற்றுள்ள சாதனைகளை ஓரளவாவது இந்தப் பொருட்காட்சி மூலம் மக்கள் புரிந்து கொள்வார்கள்.

வாய்ப்பும் வசதியும் கிடைத்தால் தமிழீழ மக்களும் உலகின் எந்த மக்களுக்கும் சளையாத முறையில் விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார முன்னேற்றத்தை அடைவார்கள் என்பதை இப்பொருட்காட்சி எடுத்துக் கூறுகிறது.

பாரம்பரிய தொழில்களும் நவீன தொழில்களும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்து முன்னேற வேண்டும், முன்னேறுகின்றன என்பதையும் இப்பொருட்காட்சி பிரதிபலித்தது.

பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் கண்காட்சி சாலையைப் பார்த்த போது இதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

30க்கும் மேற்பட்ட அம்சங்களைக் கொண்டிருக்கும் இச்சாலையில் பாவனைப் பொருள்கள், உணவுப் பொருள்கள், கலைப்பொருள்கள் ஆகிய யாவும் இருக்கின்றன.

சுளகு, கடகம், மூடல், பாய், வன்னப்பாய், உரல், உலக்கை, தொப்பி, பிரஷ், ஆகிய பாவனைப் பொருள்களும் வெல்லம், பல்வகை இனிப்புகள், குளிர்பானங்கள் ஆகிய உணவுப் பொருள்களும் பூ''வாஸ்'', குங்குமச் சிமிழ் முதலிய கலைப் பொருள்களுமாக 30க்கும் மேலான பொருள்கள் இச்சாலையில் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

பனை உற்பத்திப் பொருள்கள் இன்னமும் பிரதானமாக வடமராட்சியிலிருந்தே வருகின்றன என்பதையும் அறியக் கூடியதாக இருந்தது.

முன்னர் பரவலாகப் பாவிப்பில் இருந்த உரல் உலக்கை (பாக்கு வெற்றிலை இடிக்கப் பயன்படுத்தப்பட்டது.) இச்சாலையில் குறிப்பிடத்தக்க காட்சிப் பொருளாக இருந்தது. இப்பொழுது அது மருந்துவகை இடிக்கப் பயன்படுத்தலாம்.

இக்கண்காட்சி சாலையில் இன்னும் ''கோபாம்'' சித்த மருத்துவ மருந்துகளும் காட்சியில் இருந்தன.

உற்பத்தி இலக்குகள்

பொருட்காட்சியின் பிரதான அங்கம் விவசாயப் பகுதி. தேச நிர்மாணிகளால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள், கைத்தொழில் பகுதி, புள்ளி விபரப் பகுதி, விலங்கு வேளாண்மைப் பகுதி, சூழல் பாதுகாப்புப் பகுதி, தேனீ வளர்ப்புப் பகுதி எனப் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

தமிழீழத்தின் பொருளாதார உற்பத்தி நிலைமையையும் இலக்குகளையும் இப்பகுதிகளில் காட்சிக்கு உள்ள பொருள்களும் வரைபடங்களும் புள்ளி விவரங்களும் நன்கு எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

எமது வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தை வளமாக்கலாம்

வட தமிழீழத்திலிருந்து வன்னிப் பகுதிக்கு நாம் நகர வேண்டியதன் அவசியத்தை புள்ளி விவரப் பகுதி வலியுறுத்தியது.

விவசாயப் பகுதியில் கிராமிய உற்பத்திக் குழுவின் வேலைத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டங்கள் பல வெற்றிகரமாக நடைபெற்று

உதாரணத்துக்கு உழவு மாடு வளர்ப்பு, சம்புத் தானிய உற்பத்தி ஆகியவற்றை குறிப்பிடலாம். 2,500 சோடி மாடுகள் வளர்க்கப்பட்டுள்ளன என்பதைக் கேட்கும்போது மன நிறைவாக இருந்தது.

அதுபோலவே வன்னிப் பிரதேசத்தில் தங்கக் காணிப் பங்கீட்டினால் 8,265 குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன; 3,527 ஏக்கர் நிலம் சகுபடி செய்யப்பட்டுள்ளது.

தேச நிர்மாணிகளின் வேலைத் திட்டங்கள் பற்றிய பகுதி தமிழீழ பொறியியல் திட்டமிடல் பகுதியின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுகிறது.

சீமெந்து இல்லையா?

இதோ நாம் செயலிழந்து சோர்ந்து போகவில்லை. பூச்சு வேலை செய்யக்கூடிய, சிறிய வீடுகள், கட்டக் கூடிய சுண்ணாம்பை அவர்கள் தற்போது உற்பத்தி செய்துள்ளார்கள். அவர்களுடைய நிகழ்கால எதிர்காலத் திட்டங்கள் வியப்பூட்டுவனவாகவும் அதே வேளையில் நடைமுறை சாத்தியமானவையாகவும் அமைகின்றன.

மேலும் பொருட்காட்சியில் சிரட்டைக் கரி எரித்து அதன் வாயுவைக் கொண்டு டைனமோ எரிக்கவும், உழவு இயந்திரம் ஓடவும் கூடிய தன்மையை இளைஞர்கள் செய்முறை மூலம் விளக்கிக் காட்டினார்கள். ''வாஷர் இல்லாத பம்பு, இரட்டைச் சூட்டடுப்பு ஆகியனவும் தமிழீழ மக்களின் புதுமை புரியும் திறமைகளைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன.

தமிழீழ நிர்மாணிகள் சூழல் பாதுகாப்பில் எவ்வளவு அக்கறை செலுத்துகிறார்கள் என்பதையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பொருட்காட்சி மூலம் காண முடிகின்றது. திட்டமிட்ட மரநடுகை நிர்மாணிகளின் முக்கிய வேலைத் திட்டங்களில் ஒன்றாகும்.

கைத்தொழில் பகுதியில் தோல் பொருள் பதனீடு பற்றியும், தும்பு அடிக்கும் இயந்திரம் பற்றியும் காட்சிப் பொருள்கள் மூலம் அறிய முடிந்தது.

தொழிற்றுறை வளர்ச்சிக்கு ஆலோசனை - உதவி வழங்கும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனமும் பொருட்காட்சியில் முக்கிய இடத்தை எடுத்து அதன் பணியை விளக்கிக் கொண்டிருக்கிறது.

இப் பொருட்காட்சி அளவில் சிறியது. ஆனால் தாக்கத்தில் பெரியது.

பொருட்காட்சியில் மக்களைக் கவர்ந்த இன்னொரு அம்சம் அங்கு கடமையாற்றிய தொண்டர்களின் எல்லையற்ற உற்சாகம் ஆகும்.

தமிழீழத் தேசத்தைக் கட்டி வளர்ப்பதற்குரிய உற்பத்தி, பொருளியல், விஞ்ஞானத் துறைகளின் எதிர்காலம் ஒளிமயமானது என்பதை பொருட்காட்சியும் இளைஞர்களின் அந்த உற்சாகமும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

★

— வீயெஸ் —

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒரு வீட்டுக்குரிய பாவனை தீராந்திகளும், வேப்பம் பலகைகளும் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: பூலோகசிங்கம், கணேஸ் ஸ்ரோர்ஸ், மந்திகை, புலோலி. (26936)

புதிய இரும்பு அலுமாரிகள் (Steel Cupboard) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: T. [illegible]வேஷ், இல. 88. தேவாலய வீதி, (Chapel street), யாழ்ப்பாணம். (6421)

CLEARANCE SALE

இந்தியச்சஞ்சிகைகள், மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி-5528)

சியாக்காய் பவுடர்

பேன், பொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதுடன் கூந்தல் வளர்ச்சி, கண் குளிர்மைக்கு மிகவும் திறமையானது. சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சீயாக்காய்பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (26778)

சாண விறாட்டி

கணகணப்பூட்டும் சாண விறாட்டி ஒன்றின் விலை ரூபா 1/- மட்டுமே. "மில்க் வைற்" (சி-5587)

வடமராட்சியில் நீமியா

நீமியா உரம்-வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாகக் கொண்டது. மண்ணுக்கு வளமூட்டி பயிர்களைப் பீடைகளிலிருந்து பாதுகாத்து விளைச்சலைப் பெருக்குவது. புலோலி சமநல சேவை நிலையத்தில் விற்பனையாகிறது. ஒரு கிலோ பக்கற் ரூபா 18/- மட்டுமே. "மில்க்வைற்" (சி-5585)

தவறிவிட்டது

29-7-93 இரவு அல்லிப்பளை இறங்குதுறையில் இருந்து பஸ் நிலையத்திற்கு செல்கையில் பிரயாணப்பை (சொக்லேற் நிற கிட்பாக்) தவறிவிட்டது. அதனுள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. கிருபாகரன், இல. 42, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (26922)

4426801/83 V இலக்கமுடைய ஜெயரட்ணம் கருணாகரன் என்பவரின் அடையாள அட்டை 06-08 93 அன்று நுணாவிலுக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜெ. கருணாகரன் "சந்திர வாசா" துன்னாலை தெற்கு, கரவெட்டி என்ற விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். (26934)

கணிதம்

O/L Distinction, Credit பெறுபேறுடைய ஆண்டுகள் 6, 7, 8, 9, 10 உட்பட B.Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (6416)

ஆசிரியை தேவை

பாலர் பாடசாலைப் பயிற்சி பெற்ற அல்லது அனுபவம் உள்ள ஆசிரியை தேவை. கொக்குவில், கோண்டாவில், தாவடியை வதிவிடமாகக் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை கல்வித் தகைமைகளுடன் 23-8-93க்கு முன்னர் பொறுப்பாளர், மனோன்மணி பாலர் பாடசாலை, நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பவும். (26898)

வெளிவந்துவிட்டது

தோத்திரத்திரட்டு, கூட்டு வழிபாடு ரூபா 30/- (மலிவுப்பதிப்பு) அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-5658)

பிரார்த்தனை - மாலை (தோத்திரத்திரட்டு) ஆக்கம்: ஆத்மஜோதி முத்தையா. வெளியீடு: மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். கிடைக்குமிடம்: ஸ்ரீ சாந்த புத்தகசாலை நல்லூர், மக்மிலன் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. (சி-5659)

உதவியாளர் தேவை

வைத்திய நிலையத்தில் தாதியாகக் கடமையாற்றக் கூடிய 25 வயதுக்குட்பட்ட பெண் உதவியாளர் (பயிலுனர்) தேவை. தொடர்பு: நடன முருகன் வைத்தியசாலை, சத்திரச் சந்தி, யாழ்ப்பாணம். (6415)

உதவி தாதியர் பயிற்சி நெறி

DIPLOMA - IN NURSING - AID

அனுமதிகள்:

19 - 08 - 93 வரை நீடிக்கப்பட்டுள்ளன.

சாயி மெடிக்கல் அக்கடமி

இல:10,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5654)

(O/L) MATHS

G. C. E. O/L கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6419)

பயிலுனர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல வீடியோ ஒன்றிற்கு வீடியோ வேலை பழக ஆர்வமுள்ள 15—20 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 31-8-93. மே/பா 914, உதயன். (சி-5666)

கவலையை விடுங்கள்

மில்க்வைற் நீல சோப், மில்க்வைற் சலவைப் பவுடர் மீண்டும் கடைகளில் கிடைக்கிறது. உள்ளூர் உற்பத்திகளைப் பாவனைக்குக் கொள்வோம். உள்ளூரில் பல நற்பணிகள் தொடர உதவுவோம். மில்க்வைற் மேலுறைகள், வெற்றுப்பக்கற்றுகள் சேகரித்து சிறந்த அன்பளிப்புகளைப் பெறுங்கள். "மில்க்வைற்" உள்ளூர் உற்பத்தி. (சி-5586)

கரபந்தாட்ட போட்டி

ஆனைக்கோட்டை சாவற்காடு மகாத்மா சனசமூக நிலையத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கரபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்பட உள்ளது. (ச-152)

ST. JOHN'S COLLEGE, JAFFNA AND CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.

ADMISSION - 1994

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டுமே வெற்றிடங்கள் உண்டு.

   ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு

2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22 - 09 - 1993
   - (அ) விண்ணப்பப் படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01 - 09 - 1993 முதல் 15 - 09 - 1993 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   - (ஆ) எக்காரணங்கொண்டும் 15 - 09 - 1993 க்கு பின் விண்ணப்பப் படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   - (இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   - (ஈ) 22 - 09 - 1993 க்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ பிரதி கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களிலும் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆண்டு ஒன்றிற்கான படிவத்திற்கு ரூபா 100/- ஆண்டு ஆறுக்கான படிவத்திற்கு ரூபா 150/- செலுத்த வேண்டும்.
7. வயதெல்லைகள்:
   - (அ) ஆண்டு ஒன்று — விண்ணப்பதாரி 01 - 02 - 1988 க்கும் - 31 - 01 - 1989 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   - ஆண்டு ஆறு — விண்ணப்பதாரி 01 - 02 - 1983 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை:
   ஆண்டு ஆறு வகுப்புக்கு 23 - 10 - 1993 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்கள்.

(சி-5554)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 21 — 09 — 1909

மறைவு: 17 — 07 — 1993

அமரர்

மாணிக்கம் பொன்னுத்துரை

17-07-1993இல் சிவபதமடைந்த அமரர் மாணிக்கம் பொன்னுத்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16-08-1993) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் அதிகாலை 5மணிக்கு நடைபெறும்.

வீட்டுக்கிருத்தியத்திலும் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பொ. வேதநாயகி (மனைவி),
திரு. பொ. குகானந்தராசா (மகன்).

ஆசி அரசாங்க அதிபர் ஒழுங்கை,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(26925)

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி மாசிலாமணி பாக்கியமலர்

மலர்வு: 26—06—1936

உதிர்வு: 30—07—1989

திதி: 15 - 08 - 1993

தேவருலகில் வாழ்கின்ற — எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம் - நாளும்
"பாக்கியமலர்" காவுகின்றோம்.

பேசிச்சிரித்த முகம்பார்த்து - தாய்மைப்
பெட்டகத்துள் - தவழ்கின்றோம்
வீசிச் சிரிக்கும் பொன்காற்றில்-மாசில்
வீணையில் தவமாகின்றோம்.

அம்மாவைப் பாடிடுவோம் - தினமும்
அம்மாவைப் பாடிடுவோம்
இம் மாநிலம் இருக்கும் வரையும் பெற்ற
எம்தாயை என்றும் வணங்குவோம்.

ஆண்டுகள் கழிந்தாலும் அன்பு மறவாத:
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள், தந்தை,
சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(26944)

யாழ்ப்பாணம்

உதயன்

ஊர் தோறும் திருவிழாக்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருவிழாக் காலம் இது. ஆலயங்கள் பலவற்றிலும் வருடாந்த மகோற்சவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் பல ஆலயங்களில் மகோற்சவங்கள் ஆரம்பமாகவுள்ளன. வருடத்தில் பங்குனி முதல் புரட்டாதி வரை ஏழு மாதங்களுக்குத் திருவிழாச் ''சீசன்'' இங்கு தொடர்வதுண்டு.

மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி, துர்க்கை அம்மன், நாகபூஷணி அம்மன், ஈழத்துச் சிதம்பரம், வண்ணை வெங்கடேஸ்வரர், பொன்னாலை வரதராஜப் பெருமான், வல்லிபுரக் கோவில் மற்றும் சரித்திரப் பிரசித்திபெற்ற பெரிய ஆலயங்களின் மகோற்சவங்கள் குடாநாடு முழுவதிலும் வாழும் பக்தர்களுக்குப் பொதுவானவை.

அவற்றைவிட ஊர்தோறும் உள்ள பிள்ளையார், சிவன், முருகன், அம்மன், விஷ்ணு ஆலயங்களிலும் மாறி மாறி மகோற்சவங்கள் நடந்து கொண்டிருக்கும்.

குடாநாடெங்கும் ஆலய வருடாந்தத் திருவிழாக்கள் ஆன்மீகச் சூழலை உண்டாக்குவன. மக்களை இறைவழிபாட்டுக்குத் தூண்டுவன. மனிதனின் உள்ளத்தே வாழும் இறைவனை ஆலயங்களில் விக்கிரகங்களாகக் கண்டு மனம் ஒன்றித்து வணங்கி உய்தி பெறுவதே திருவிழாக்களின் நோக்கம்.

போர்க்காலச் சூழ்நிலையிலும் ஆலயங்கள் இத்தனை சிறப்பாக நடைபெற்று வருவது மக்களது தெய்வ நம்பிக்கையினையும், ஆன்மீகம் நிறைந்த உள்ளங்களையும் பிரதிபலிக்கின்றன என்று பலரும் கருதுகின்றனர். ஆனால் ஆலயத் திருவிழாக்களை நடத்தும் நாம் உண்மையான சமய தத்துவங்களையும், அவை காட்டும் வாழ்க்கை நெறிகளையும் உணர்கிறோமா, கைக்கொள்கிறோமா என்பதே கேள்வி.

திருவிழாக்களின்போது ஆலயங்களில் கூடுகிறோம். பெரும்பாலும் பெயருக்கு வழிபடுகிறோம். பூசைகள் நடக்கின்றன. கூட்டுப் பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன. சமயச் சொற்பொழிவுகள் நிகழ்கின்றன. கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அவற்றைக், கண்டும் கேட்டும் உணர்ந்தும் கொள்வதால் தெய்வீகம் முகிழ்ப்பதாகக் கூறுவது பொருத்தமா?

ஆலய வழிபாடு மனதை இறைவன்பால் நாட்டங்கொள்ள வைப்பதற்கான மார்க்கம். ஆனால் திருவிழாக்களால் அந்த நோக்கம் அரைவாசியேனும் நிறைவேறுகிறதா என்றால் இல்லை. இது கவலைக்குரிய போக்கு. ஆலயம் சென்றால் போதாது. பாடிப் பரந்து பூசித்து வணங்குவதோடு மட்டும் நின்றுவிடலாகாது.

சமயம் காட்டும் வாழ்க்கை நெறிகளை பின்பற்றுவதற்கு நாளாந்த வாழ்வில் கைக்கொள்வதற்கு நாம் பழகவேண்டும். அப்போதுதான் ஆலயவழிபாட்டால் பூரண பயன் கிடைத்ததாகக் கொள்ளலாம்.

திருவிழாக்களை வெறும் பொழுது போக்கும் அல்லது வேடிக்கை நிகழ்ச்சியாக்க முனையக்கூடாது கோவிலுக்குப் போனோம்; கும்பிட்டோம்; வந்தோம் என்பதால் ஆன்மீக நினைவை வளர்க்க முடியாது. சமயத்தைப்பேண முடியாது; வளர்க்கவும் முடியாது. குளிக்கப் போய் சேறு பூசும் நிலையாகவே அது அமையும்.

சமயம் காட்டும் வாழ்க்கையில் நாளாந்தம் ஒரு சிறிதளவாயினும் கைக்கொண்டு வாழ்ந்தோமாயின் வாழ முயற்சிப்போமாயின் அதுவே இறைவனை அடைவதற்கான மனப்பக்குவத்தை உருவாக்கும்.

திருவிழாக் காலங்களில் இதனை நாளாந்த சிந்தனையில் சேர்த்துக் கொள்வோம், சமயம் காட்டும் நெறி நின்று வாழ்வோமாக. ஊர்தோறும் திருவிழாக்கள் கொண்டாடுவதோடு நிற்காமல் இல்லந்தோறும், உள்ளந்தோறும் சமய நெறிகளைப் பின்பற்றுவதே பயனுடைத்து.

ஆலயங்களில்

அச்சுவேலி பத்தமேனி தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா நாளை திங்கட்கிழமையும் தீர்த்தத் திருவிழா செவ்வாய்க்கிழமையும் நடைபெறும். (த-72)

நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணி மண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் மாலை 6 மணிக்கு திரு. க. சொக்கலிங்கத்தின் சமயச் சொற்பொழிவு, 6 45 மணிக்கு திரு. கே. எம். பஞ்சாபிகேசன், திரு. எம் பி நாகேந்திரன் குழுவினரின் மங்கள இசை.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5 - 15 — 6 - 15 ''கர்ணன்'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ வை: நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்—

பிற்பகல் [illegible]—3 மணிவரை ''கந்த விரதங்கள்'' எனும் பொருளில் திரு. வை. க. சிற்றம்பலம் சமயச் சொற்பொழிவு.

★ மாலை 5-30 — 6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''மாறுபடு சூரனை வதைத்த முகம்'' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

இன்று

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு கிராம அலுவலர்களுக்கு நடத்திய பயிற்சி நெறி நிறைவுநாள் விழாவும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும். (க-30)

நாளை

சரசாலை இந்து மன்றம் நடத்திய பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும். (க-30-118)

விகாராதிபதியின் தலையை வெட்டிய 2 பிக்குகள் கைது

களுத்துறை சங்காராம விகாரையின் அதிபதியான தேமினியே மங்கள தேரோ என்னும் 72 வயது பௌத்த பிக்கு ஒருவரின் கழுத்தை வெட்டிக் கொலை செய்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அதே விகாரையைச் சேர்ந்த இரு இளம் பௌத்த பிக்குகளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பௌத்த பிக்குவின் தலையற்ற உடலை களுத்துறை களுகங்கை போதிக்குச் சமீபமாக பொலிஸார் கைப்பற்றினர். துண்டிக்கப்பட்ட தலை முகத்துவாரம் பகுதிக்கு அள்ளுண்டு சென்றிருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

பௌத்த பிக்குவின் சடலத்தை அவரது காரிலேயே எடுத்துச் சென்று கொலைஞர்கள் கடலில்வீசியுள்ளனர். கொலைக்கான காரணம் தெரியவரவில்லை. (த)

சத்திர சிகிச்சையின் போது

யாழ்ப்பாண வாசி மரணம் விசாரணை நடத்த முடிவு

கொழும்பு, ஆக. 15

சத்திர சிகிச்சையின் போது உடம்பின் உள்ளே தவறுதலாக கத்தி ஒன்றினை வைத்துத் தைத்ததால், மீண்டும்சத்திரசிகிச்சை செய்யப்பட்டபோதுஉயிரிழந்த ஆனைக்கோட்டையை சேர்ந்த திரு. செல்வநாதனின் மரணத்துக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிய சுகாதார அமைச்சு விசாரணை ஒன்றை நடத்தும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டோ சத்திர சிகிச்சை செய்த குழுவினரைப் பொறுத்த வரை கடமை தவறிவிட்டனரா என்று அறிந்து கொள்ள முயல்கின்றோம் என்றார். (த)

மீனவர்களை நோக்கிச் சூடு!

குருநகர், ஆக 15

நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் அல்லைப்பிட்டி சந்திப் பகுதி காவலரண்களில் இருந்த படையினர் 'பரா' வெளிச்சம் பாய்ச்சி கடலில் மீன் படித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனை அடுத்து மீனவர்கள் கடலில் வலைகளைக்கைவிட்டு நீந்திக் கரை வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-51)

'வெளிச்சம்' வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஆக 15

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக சஞ்சிகையின் ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் ''எமது மண்ணில் எமது கால்களில் தங்கி நிற்போம்'' என்ற செய்தி அந்த இதழில் இடம் பெற்றுள்ளது. (உ-5)

ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 15

பலாலி முகாமில் இருந்து வெள்ளி நள்ளிரவு இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். பத்தமேனி, கதிரிப்பாய், இடைக்காடு பகுதிகளை நோக்கியே ஷெல்கள் ஏவப்பட்டன. இத் தாக்குதலால் பல இடங்களில் பயிர்கள் நாசமானதாகத் தெரியவருகிறது. (உ-5)

சந்திரசேகர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருக்கிறார் என்பதும் —

தடுப்புக் காவலில் இருந்தவாறே மலையக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு மத்திய மாகாண சபைக்கு அவர் தெரிவு செய்யப்பட்டார் என்பதும் தெரிந்ததே. (உ-6)

பாடசாலைகளில்

கொக்குவில் மேஜர் முரளி பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு ஆசிரியை செல்வி இ. தரா தலைமையில் கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நல்லூர் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக நாமகள் வித்தியாலய அதிபர் திருநாவுக்கரசுவும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வலிகாமம் பிரிவைச் சேர்ந்த திரு. ஆ. இதயனும் கலந்து கொள்வர். (த)

விசேட குழு நியமனம்

கொழும்பு, ஆக- 15

கிராம சேவையாளர்களின் கடமைகள் பணிகள் பற்றி ஒரு விசேட குழு பரிசீலனை செய்யும்.

அதிகாரிகள் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் இக்குழுவை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா நியமித்து இருக்கிறார். (த-எ)

'குமாரி' கப்பலில் செல்லும் பயணிகளுக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 15

'குமாரி' கப்பல் மூலம் திருமலை செல்வதற்கு யாழ். செயலகத்தில் தமது பெயர்களை பதிவு செய்துள்ளவர்கள், இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பிரயாண ஆயத்தங்களுடன் பருத்தித்துறை துறைமுகப் பகுதிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கப்பலில் செல்லவுள்ள பயணிகள் அனைவரும் தமக்குரிய பிரயாணக் கட்டணங்களை யாழ். செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் —

பற்றுச் சீட்டைப் பெற்றவர்கள் மட்டுமே பிரயாணத்துக்கு அனுமதிக்கப்படுவர் என்றும் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை —

இன்று கப்பலில் பயணம் செய்யவுள்ள பயணிகள் தங்கள் பயணக் கட்டணத்தைச் செலுத்த வசதியாக யாழ். செயலகம் இன்று நண்பகல் 12 மணிவரை திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-5-173]

யுத்தக் கைதிகள் விவகாரம்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாம்.

பொருளாதாரத் தடையை நீக்கிப் புலிகளிடம் தோல்வி அடையக்கூடாது; மண்கிண்டி மலைத் தோல்விக்கு மேலதிகமாக இதனையும் சேர்த்துத் தோல்விப் பட்டியலை நீட்டக்கூடாது என்ற கருத்து இராணுவ உயரதிகாரிகளிடம் மட்டுமன்றி சில அமைச்சர்களிடமும் உண்டாம். சம்பந்தப்பட்ட மாநாட்டில் படை அதிகாரிகளுக்கு அவர்களும் ஒத்தூதியதாக அறிய வருகிறது.

யுத்தக் கைதிகள் விவகாரத்தில் மட்டுமன்றி, வடக்கில் மிகக் குறிப்பாக யாழ். குடாநாட்டில் மிகப்பெரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டும் என்பதில் இராணுவ உயர் அதிகாரிகளும் அவர்களுக்கு பிற்பாட்டுப் பாடும் அமைச்சர்களும் அதிதீவிர அக்கறை கொண்டிருக்கிறார்களாம்.

பிரதம தளபதியான ஜனாதிபதியின் முன் அங்கீகாரம் இன்றியே தாக்குதலுக்கான ஆயத்தங்களைச் செய்வதில் அவர்கள் ஈடுபாடு காட்டுவதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு ஒரு தாக்குதலை நடத்துவதன் மூலம் பின்வரும் இலக்குகளை எய்தலாம் என்பது அவர்கள் கருத்தாம்.

★ மண்கிண்டி மலைத் தோல்வியை ஈடு செய்வது.

★ கைதிகள் விவகாரத்தின் முக்கியத்தை இல்லாமற் செய்து விடுவது.

★ இராணுவம் வலிமையுடையது, வலுவுடையது என்பதைக் காட்டி, சிங்கள மக்களுக்கு உற்சாகவும் ஊட்டுவது அதன்மூலம் இராணுவத் தீர்வுக்கு அவர்களின் ஆதரவைச் சேர்ப்பது.

★ பொருளாதார வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகள், வெளியார் சுரண்டல், அரசியல், [illegible] களில் உள்ள [illegible] வற்றை மறைப்பதற்கு மூடுதிரையாகப் பயன்படுத்துவது.

படையினர் வலைக்குள் விஜே!

படை உயர் அதிகாரிகளின் இந்த வலைக்குள் சிக்குண்டிருக்கும் விஜேதுங்கா அதிலிருந்து வெளியே வருவது பெரிதும் கடினம் என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், ஜனாதிபதிக்குத் தெரிந்த ஒருவர், கொழும்பில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கண்டபடி கைது செய்யப்படுவது குறித்து பிரஸ்தாபித்து அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டார்.

ஜனாதிபதி பதில் சொல்வதற்கு முன்னர் அவருடன் கூட இருந்த மிக உயர்ந்த பொலிஸ் அதிகாரி முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக்கொண்டு பதிலளித்திருக்கிறார்.

எமது நாட்டின் ஜனாதிபதியே கொலை செய்யப்பட்ட பின்னர், இனி யாரை நாம் நம்புவது? எவரையுமே நம்ப முடியாது. எல்லோரையும் சந்தேகத்துடன் தான் பார்க்க வேண்டி உள்ளது என்று அந்த அதிகாரி கூறியிருக்கிறார்.

அவரைத் தொடர்ந்த ஜனாதிபதி விஜேதுங்கா —

நான் கண்டபடி பிடிக்க வேண்டாம் எனக்கூறமுடியாத நிலையில் உள்ளேன். ஏன் பிடித்தீர்கள் என்றால் சந்தேகம் என்கிறார்கள். எப்போது விடுவீர்கள் என்றால் கொஞ்சம் விசாரிக்க வேண்டும் என்கிறார்கள். நான் அதனை மீறி எதுவும் செய்ய முடியாதுள்ளதே என்று 'அப்பாவி'யாகப் பேசியிருக்கிறார்!

தமிழர்களைக் கண்டபடி கைது செய்யும் விடயத்தி [illegible] நிலைமை என்றால் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் எப்படிச் சொந்த முடிவினைச் செய்யமுடியும்? நல்ல முடிவுக்கு வரமுடியும்?

★ ★ ★

பூநகரியும் கிளாலியும்

யுத்தக் கைதிகள் விடுதலை, பொருளாதாரத்தடை என்பன எவ்வித முன்னேற்றமும் இன்றி சுற்றிச் சுற்றி வந்து நாடக அரங்கிலேயே நிலை கொள்ள—

தமிழ் மக்கள் மீதான போக்குவரத்துத் தடையை நீக்குவது சம்பந்தமான முயற்சியும் வட்டம் போட்டு சைபராகவே வந்து நிற்குமா என்ற மற்றொரு கேள்வி எழுந்துள்ளது.

ஆனால் இது விடயத்தில் முன்முயற்சி எடுத்துவரும் அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் ஒய்ந்து விடவில்லை என்ற கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

பூநகரி - கேரதீவுப் பாதையைத் திறப்பது சம்பந்தமான பேச்சுக்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடக்கவிருந்ததாக அறியப்பட்டது. ஜனாதிபதி விஜேதுங்காவும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளும் இது விடயம் குறித்துப் பேச ஏற்பாடாகி இருந்தது.

பூநகரி - கேரதீவு பாதையைத் திறப்பது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் முன்னர் சமர்ப்பித்த யோசனைகள் குறித்தே வெள்ளிக்கிழமை மாநாட்டில் பரிசீலித்து ஆராயப்படவிருந்தது.

விடுதலைப் புலிகளின் யோசனைகள் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டன. அதன் பின்னர் அங்கிருந்து வந்த அறிவுறுத்தலின் பேரிலேயே தூதரக அதிகாரிகள் ஜனாதிபதியை சந்திக்க முடிவு செய்தனராம்.

★ பாதையால் செல்லும் மக்களை இராணுவம் சோதனையிடக் கூடாது.

★ பாதையால் யார் செல்லலாம் என்பதனைப் படையினர் தீர்மானிக்க முடியாது.

★ பிரயாணிகளைப் படையினர் கைது செய்ய அனுமதிக்கலாகாது. துன்புறுத்தல் எதுவும் இருக்கக் கூடாது.

— என்ற அம்சங்களை உட்படுத்தியே வெள்ளிக்கிழமை பேச்சுக்கள் அமையும் எனவும் அறியப்பட்டது. இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக தூதரகத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி கடந்த வாரம் கொழும்பு சென்றிருந்தார்.

கிளாலிக் கடற்பாதை மரணப் பொறியாக விளங்குகிறது என்பது இப்போது உலகத்துக்கே தெரியும். பூநகரி விவகாரம் சரி வந்தால் என்ன விட்டால் என்ன கிளாலிப் பாதையைத் தடுப்பதில் படையினர் தீவிரமாக உள்ளனர் என்று கொழும்பில் பேசப்படுகிறது.

கிளாலிப் பாதையை எப்பாடுபட்டும் தடுத்தே தீருவோம் என்று கடற்படைத் தளகர்த்தர் ஹமில்டன் வணசிங்கா தம்மைச் சந்தித்த அரசாங்க அதிகாரி ஒருவரிடம் கூறியிருக்கிறார். அந்தப் பெரிய கடலில் அது எப்படிச் சாத்தியமாகும் என்று அதிகாரி கேட்டதற்கு ''அமெரிக்க கடற்படையைக் கொண்டு வந்தாவது அந்தப் பாதையை தடுத்தே தீருவோம்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாராம் ஹமில்டன்.

சினப்போ, இனப்போ, நெஞ்சத்தில் இருப்பது தானே, நாவில் வரும்! ★

உணவுக்காய் பயிரிடுவோம்
எம் ஈழத்தை உயர்த்திடுவோம்

வடக்கு - கிழக்கில் விவசாயிகள்

முழுமையாக விவசாயத்தில் ஈடுபட்டால் விரைவில் அரிசி இறக்குமதி நிறுத்தலாம்

கொழும்பு, ஆக. 15

வடக்கு - கிழக்கு பகுதிகளில் விவசாயஉற்பத்தி நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்படுமாயின் 1995ஆம் ஆண்டுக்கு முன்னதாக அரிசிஇறக்குமதியை நிறுத்திவிடலாம்.

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித் துறை அமைச்சர் திரு. தர்மதாசபண்டா அண்மையில் நடாளுமன்றில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் தெரிவித்ததாவது;

''வடக்கு-கிழக்கு பகுதிகளில் குறிப்பாக கிழக்கில் 35 ஆயிரம் ஏக்கர் விவசாயநிலம் செய்கை பண்ணப்படாமல் உள்ளது. அப்படியிருந்தும் விவசாயிகள் நல்ல உற்பத்தியைத் தந்துள்ளனர்.

''வடக்கும்-கிழக்கிலும் விவசாய முயற்சி முழுமையாக மேற்கொள்ளப்படுமாயின் விரைவில் அரிசி இறக்குமதியை நிறுத்த முடியும்.'' இவ்வாறு அவர் சொன்னார். (த)

மரண அறிவித்தல்கள்

திருமதி தம்பு நாகம்மா

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பு நாகம்மா அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் சந்தையா தம்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மு. கோபாலபிள்ளையின் சகோதரியும், திரு. மு. கார்த்திகேசுவின் சகோதரியும், திரு. கந்தையாவின் (அதிபர், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. அன்புத் தாயாரும், திருமதி க. மனோன்மணியின் அன்பு மாமியும், க. வெநேசன், க. சிவாஜினி, க. கிருஷ்ணராகுலன், க. சமந்தன், க. வினோதினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி. ப. 2.00 மணிக்கு வேவில் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
த. கந்தையா
(மகன்)

கண்டி வீதி,
கொடிகாமம்.

(26951)

மார்க்கண்டு தம்பிராசா

உரும்பராய் கிழக்கு பூதவர்ராயர் கோவிலடியைச் சேர்ந்த மார்க்கண்டு தம்பிராசா காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திருமதி நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சற்குணானந்தன் (கனடா), சதீசன் (ஜேர்மனி), சுதேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மா. சுப்பிரமணியம் (இருபாலை), காலஞ்சென்ற கந்தசாமி (நீர்வேலி) மற்றும் திருமதி சிவசம்பு இராசம்மா (உரும்பராய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி பொன்னுத்துரை பரமேஸ்வரி, துரைசிங்கம், சிவலிங்கம், தருமலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-08-93) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இளங்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. துரைசிங்கம் [மைத்துனர்]

உரும்பராய் கிழக்கு.

(26946)

அரியநாயகம் லிங்கநாயகம்

திரு. அ. லிங்கநாயகம் (லிங்கன்) — யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவன்—லண்டனில் காலமானார்.

இவர் திரு. திருமதி அரியநாயகம் (பாப்பா) அவர்களின் மூத்த தவப் புதல்வனும், சுசிலாவின் (சென்னை) அன்புக் கணவனும், வெங்கடேசனின் அன்புத் தந்தையும், திருமதி இராசலட்சுமி கனகரத்தினத்தின் அன்புப் பெறாமகனும், கௌரி (Sarawack), சாந்தினி, தர்மினி (ஸாம்பியா), விக்னேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், இரவீந்திரன் (Sarawack, திருவாதவூரன், குகானந்தன் (ஸாம்பியா) ஆகியோரின் அன்பு மைத்துனனும், கனிஷ்கா, குருகுகன், ஆத்மஜன் ஆகியோரின் ஆசை மாமனாரும், காலஞ்சென்ற திரு திருமதி விசுவலிங்கம் (வரியப்பு ம், கன்னாகம்), காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்துரை (மலாயன் பென்சனியர், நீராவியடி) ஆகியோரின் தவப் பேரனும். Dr. பாலா (லண்டன்), திரு இராசேந்திரம் (லண்டன்), திருமதி செல்லப்பா பூரணப்பிள்ளை, திருமதி இராசா சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-08-1993 இல் லண்டனில் நடைபெற்றன.

தகவல்:
திரு. வி. அரியநாயகம்

198, கஸ்தூரியார் வீதி,
நீராவியடி.
யாழ்ப்பாணம்.

[6425]

நாராயணசாமி இராசம்மா

தம்பயபுலம் அளவெட்டியைச் சேர்ந்தவரும் தற்சமயம் இடம் பெயர்ந்து யமுனா வீதி சங்கிலியன் தோப்பு நல்லூரில் வசித்தவருமாகிய நாராயணசாமி இராசம்மா நேற்றுக் காலமானார்.

அன்னார் மகாலட்சுமி, பரமேஸ்வரி, குணசிங்கம் (CT.B – கொண்டாவில்), இராஜேஸ்வரி, குணலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், வல்லிபுரம், கந்தசாமி, முருகேசு, நகுலேஸ்வரி, சிவபாதம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-08-93 பி. ப 12-30 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவும்.

தகவல்
நா. குணலிங்கம்
(C.T.B. கொண்டாவில்)

36/3, யமுனா வீதி,
நல்லூர்

(6423)

இலங்கை வெற்றி!

இந்தியாவுக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரை 2-1 என்ற ஆட்ட வித்தியாசத்தில் இலங்கை வென்றது.

நேற்று மொறட்டுவை டிரோன் பெர்னாண்டோ ஸ்டேடியத்தில் நடைபெற்ற—மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் — மூன்றாவது ஆட்டத்தில் 4 விக்கெட்டுகளினால் வெற்றியைத் தட்டிக்கொண்டதன் மூலம் ஆட்டத் தொடரிலும் இலங்கை வெற்றியை சுவீகரித்துக் கொண்டது.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 227 ஓட்டங்களை எடுத்தது அணித் தலைவர் அஸாருதின் 85 ஓட்டங்களை எடுத்தார்.

இலங்கை அணி 6 விக்கெட் இழப்புக்கு 231 ஓட்டங்களை எடுத்தது. ரோஷான் மஹாநாம ஆட்டமிழக்காமல் 92, அஸங்க குருசிங்க 42 ஓட்டங்களை எடுத்தனர்.

பயணிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் கம்பனிக்கு கட்டணம் செலுத்தப்படும். அந்தக் கட்டணம் கப்பலில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளிடமிருந்து அறவிடப்படும்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து இது தொடர்பாக இணக்கம் காணப்பட்டதாக அறிய வந்தது.

இன்று 'குமாரி' கப்பல் மூலம் தமது பெயர்களைப் பதிவு செய்த 40 பேர் திருமலை செல்லவுள்ளனர்.

ஐ.தே.க.-ஐ.ஐ.தே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தூதுவர் பதவியோ அல்லது கூட்டுத்தாபனங்களில் பணிப்பாளர் பதவிகளோ வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் தொழில் அமைச்சராக இருந்த ஐ. ஐ. தே. மு. செயலாளர் ஜி. எம். பிரேமசந்திராவுக்கு வடமேல் மாகாண முதலமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்றும்—

தற்போது வடமேல் மாகாண முதலமைச்சராக இருக்கும் ஜெயவிக்ரம பெரேராவுக்கு மத்திய மந்திரி சபையில் அமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரையும் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதாயின் தேசியப் பட்டியலில் இருந்து மூன்று ஐ. தே. க. எம். பிக்கள் பதவி விலக வேண்டியிருக்கும். அந்த மூவரையும் கண்டு பிடிப்பதே ஐ. தே. க. மேலிடத்துக்குத் தற்போது சிரமமாக உள்ளதாம். (த)

விசேட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அம்பாறை மாவட்டத்தில் இருந்து மட்டக்களப்புக்கு மாற்றப்பட்ட விசேட அதிரடிப்படையினர் பெரிய நீலாவணையில் இருந்து தாழங்குடா வரையான 17 மைல் பிரதேசத்தில் முகாம்களை அமைத்துள்ளனர்.

இந்த மாற்றங்களை அடுத்து மட்டக்களப்பு பகுதியில் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்து வருவதாகவும்—

படையினரின் சுற்றிவளைப்பு, தேடுதல், கைது செய்தல் போன்ற நடவடிக்கைகளும் அங்கு அதிகரித்திருப்பதாகவும் ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது.

செட்டிப்பாளையம், புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி, மண்முனை ஆகிய இடங்களில் கடந்த திங்களன்று விசேட அதிரடிப்படையினர் முகாமிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கிடையில்—

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுக்கு அருகே உள்ள எட்டாம் கட்டை, ஐந்தாம் கட்டை, ஒலுவில் ஆகிய இடங்களில் இருந்த விசேட அதிரடிப்படைப்படை முகாம்கள் கடந்த செவ்வாயன்று மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மூடப்பட்ட முகாம்களில் ஒலுவில் முகாமுக்கு பொலிஸார் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதனையடுத்து அட்டா[illegible] யம் மூடப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

உலகில் அதிக எண்ணிக்கையில்

சிறுவர் பலியாகக் காரணம் வயிற்றோட்டம், சளிசுரம்

உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

லண்டன், ஆக. 15

உலகின் பெரும்பாலான சிறுவர் மரணங்களுக்கு நிமோனியாக் காய்ச்சலும் (சளிசுரம்), வயிற்றோட்டமுமே காரணமாக உள்ளன என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது

வருடந்தோறும் 75 லட்சம் சிறுவர்கள் இந்த நோய்க்கு பலியாகின்றார்கள்.

இரண்டாயிரமாம் ஆண்டளவில் மேலும் 40 லட்சம் பிள்ளைகள் இந்நோய்களினால் இறக்கலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

நிமோனியா, வயிற்றோட்டம் ஆகிய நோய்களுக்கு குறைந்த செலவில் சுலபமாக வைத்தியம் செய்ய முடியும் என வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். வைத்திய முறைகளை மக்களிடையே அறிமுகப்படுத்தாமையும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ளவர்கள் இது பற்றி அறியாமல் இருப்பதுமே சிறுவர்களின் மரணங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும் என்றும் கூறப்பட்டது.

ஆண்டு தோறும் உலகில் 130 கோடி சிறுவர்கள் வயிற்றோட்டத்தினாலும் மேலும் 4 கோடி சிறுவர்கள் நிமோனியாக் காய்ச்சலினாலும் பாதிக்கப்படுகின்றனர். இந்த எண்ணிக்கையில் பெரும்பாலானவர்கள் ஐந்து வயதிற்கு உட்பட்டவர்களாவர்.

(உ-162)

வடபகுதி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று வெளியிட்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

முன்னர் கைதிகள் விடுவிப்பு தொடர்பாக ஏற்பட்ட இணக்கத்தை அடுத்து பொருளாதாரத் தடையை நீக்குவதாக அரசு அறிவித்திருந்ததும்—

ஆனால் பின்னர் இராணுவ அதிகாரிகளின் சூடான நிர்ப்பந்தத்துக்குப் பயந்து தடையை நீக்கமுடியாது என்று அரசு அறிவித்திருந்ததும் தெரிந்ததே என பி.பி.ஸி நினைவூட்டியது.

கைதிகளின் விடுதலை தொடர்பான முயற்சிகள் நேற்றைய அறிவிப்புடன் தோல்வி கண்டுவிட்டதாகவும் —

இன்று அல்லது நாளை விடுதலையாவோம் என்ற நம்பிக்கையுடன் யாழ்ப்பாணத்தில் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளுக்கு தங்கள் இராணுவ தளபதிகளின் இந்த அறிவிப்பு ஏமாற்றத்தையே கொடுத்திருக்கும் என்றும் பி. பி. ஸி. விமர்சித்தது.

இதேவேளை —

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளுக்குப் பதிலாக தமது காவலில் உள்ளவர்களில் அதே எண்ணிக்கையான விடுதலைப் புலிகளை விடுவித்து, கைதிகள் பரிமாற்றத்தைச் செய்து கொள்ள தாங்கள் தயாராக இருப்பதாக இராணுவத் தளபதிகள் அறிவித்துள்ளனர். (உ-5)

காஷ்மீரில் 15 இந்துக்கள் சுட்டுக்கொலை

புதுடில்லி, ஆக. 15

காஷ்மீர் பகுதியில் நேற்று முஸ்லிம் தீவிரவாதிகள் பஸ் ஒன்றை வழிமறித்து அதில் பயணம் செய்த 15 இந்துக்களைச் சுட்டுக் கொன்றதாக அறிவிக்கப்படுகிறது. (உ)

அகதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்க மட்டும் தற்சமயம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துக்கு அனுமதி உண்டு என்றும் —

எனவேதான் முகாம்களை நேரில் சென்று பார்வையிட இந்திய அரசிடம் அனுமதி பெற வேண்டியிருப்பதாகவும் அங்கு பணியில் ஈடுபட்டிருக்கும் ஐ நா. தூதரக அணியின் துணைத்தலைவர் ரஜீவ் கபூர் தெரிவித்துள்ளார்.

அகதிகள் முகாம்களில் உள்ள நிலைமைகள் மோசமாக உள்ளன. அதனால் தான் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதைத் தவிர அகதிகளுக்கு வேறு வழியே இல்லாமற் போய் விட்டது என்று வாஷிங்டனில் உள்ள ''ஏசிய வோச்'' என்ற மனித உரிமை நிறுவனம் முறையிட்டிருந்தது. அது பற்றி விசாரிக்கவே ஐ நா. தூதரகம் அகதி முகாம்களுக்கு செல்ல விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

வீட்டுக்கிருத்தியை அழைப்பும் நினைவஞ்சலியும்

இம்மை:
19
—
06
—
1900

மறுமை:
01
—
08
—
1993

திருமதி இராசமுத்து திக்கம் செல்லையாபிள்ளை

எமது இல்லத்தின் தீபமாய் விளங்கிய அன்னையே! தங்கள் ஆத்மா சாந்தியடையக் கந்தவனக் கடவை முருகப் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

எமது அன்னையின் மறைவு கேட்டு எமக்கு ஆதரவு காட்டி தேறுதல் கூறி ஆவன செய்த அத்தனை பேருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்;

நாளை (16-08-1993) திங்கட்கிழமை திக்கத்தில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்திய வைபவத்தில் பங்குபற்றி எமது அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து, பின்னர் நடைபெறும் மதிய போசனத்தில் பங்குபற்றும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்.

கந்தவனம்
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(26950)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/[illegible] இலுள்ள அச்சகத்தில் 15-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது